கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு - 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

# ECOS 4101 Advanced Monetary Theory and Policy

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

---

01.(a) நாணயப் பொருளியல், நாணயக் கோட்பாடு, நாணயக்கொள்கை என்பவற்றை வரையறுத்து அவற்றினிடையேயான தொடர்பினை விளக்குக.

(08 புள்ளிகள்)

(b) நிதியியல் முறைமை (Financial System) என்பதனை வரையறுத்துக்கூறி ஒரு பொருளாதாரத்தில் அதன் நடிபங்கினை (Role) விளக்குக.

(12 புள்ளிகள்)

02.(a) பழம் பொருளியலாளர்களின் பேரினப் பொருளியல் மாதிரியின் பிரதான எடுகோள்களை தருக.

(08 புள்ளிகள்)

(b) "நிறை தொழில் மட்ட நிலை என்பது பொருளாதாரத்தில் போதிய செலவீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையே வேண்டி நிற்கிறது." பழம் பொருளியலாளர் மாதிரியின் சேமிப்பு – முதலீட்டு ஆய்வினை அடிப்படையாக வைத்து இக் கூற்றினை விளக்குக.

(12 புள்ளிகள்)

03.(a) விரிவுத் தன்மை கொண்ட நாணயக்கொள்கை (Expansionary Monetary Policy), சுருக்கத் தன்மை கொண்ட நாணயக் கொள்கை (Contractionary Monetary Policy) என்பவற்றை வேறுபடுத்தி விளக்குக.

(04 புள்ளிகள்)

(b) பொருளாதார மந்த காலங்களில் நாணயக் கொள்கையின் செயற்றிறனை விளக்குக.

(08 புள்ளிகள்)

(c) வீக்க காலங்களில் நாணயக் கொள்கையின் செயலாற்றல் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கும் என்பதனை விளக்குக.

(08 புள்ளிகள்)

04.(a) புதிய பழம் பொருளியலாளர்களின் நாணயக் கோட்பாட்டு அணுகு முறையினை சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(b) கெயின்சின் அடிப்படை விளக்கங்களை அவர்கள் எவ்வாறு விமர்சித்தார்கள்?

(08 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுக்குச் சிறுகுறிப்புகள் தருக.

(a) நாணய வாதம்

(b) நாணயக் கொள்கையும் குறைவிருத்தி நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும்

(c) நிரம்பல் பக்கப் பொருளியல்

(d) குறைவிருத்தி நாடுகளின் நிதியியல் முறைமை

(20 புள்ளிகள்)